அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025

# தமிழ் - ஆண்டு 9

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

பரிதிமாற்கலைஞர், மறைமலை அடிகள் போன்றோர் வழியில் தனித்தமிழ்ப் போராளியாக மாறியவருள் தேவநேயப் பாவணரும் ஒருவர். இவர் ஐம்பது ஆண்டு காலமாகத் தமிழ்மொழி ஆய்வில் ஈடுபட்டார். தமிழரது தோற்றம், தமிழின் சொற்பிறப்பு, இலக்கிய இலக்கண வளர்ச்சி, தமிழரது பண்பாட்டு மரபுகள் என அனைத்துத் துறைகளையும் ஆராய்ந்தார். இதன் பயனாக உலகின் முதன்மொழி தமிழ் என்றும், இது தனித்து இயங்கவல்ல செம்மொழி என்றும், அதற்கு வடமொழிக் கலப்புத் தேவையில்லை என்றும் எடுத்துக் காட்டினார். இவர் தமிழ், சமற்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெரும் புலமை பெற்றவர். பிற இந்திய மொழிகள் இருபத்திரண்டினைக் கற்றவர். தமிழ்மொழி வரலாறு, வடமொழி வரலாறு என்ற இரு ஆய்வு நூல்களை எழுதி, சமற்கிருதம்தான் தமிழ்மொழியால் வளம்பெற்றது என நிறுவினார். பாவாணர் மறைந்த பின்னரும் அவர் எழுதிய பாடல்கள், கட்டுரைகள், கடிதங்கள் தொகுக்கப்பட்டு தொகை நூல்களாக வெளியிடப்பட்டன.